கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சு

கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களத்தில் முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்ப வகுதி 3 உத்தியோகத்தர் வகையின் கனிஷ்ட வானொலி அலுவலர் பயிலுனர் தரத்திற்கு திறந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்வதற்கான போட்டிப் பரீட்சை 2026

கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களத்தில் கனிஷ்ட வானொலி அலுவலர் பதவிகளில் நிலவும் 27 வெற்றிடங்களை பூர்த்தி செய்வதற்காக பயிலுனர் தரத்திற்கு திறந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்வதற்கான போட்டிப் பரீட்சைக்காக தகைமையுள்ள இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. ஆட்சேர்ப்பானது போட்டிப்பரீட்சையின் புள்ளிகளினடிப்படையில் இடம்பெறுவதுடன் இப்போட்டிப் பரீட்சையானது பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் 2027 பெப்ரவரி மாதம் கொழும்பில் நடாத்தப்படும்.

விண்ணப்பப் படிவமானது இலங்கை பரீட்சைகள் திணைக்களத்தின் www.doenets.lk இணையத்தளத்தில் " Our Services " இன் கீழுள்ள "Online Applications-Recruitment Exams / E.B Exams" ஊடாக வெளியிடப்பட்டுள்ளதுடன் நிகழ்நிலை (Online) ஊடாக மாத்திரமே விண்ணப்பங்களை சமர்ப்பிக்க முடியும். நிகழ்நிலை விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளலானது 2026 நவம்பர் மாதம் 16 ஆம் திகதி மு.ப 9.00 மணிக்கு ஆரம்பமாவதுடன் 2026 டிசம்பர் மாதம் 11 ஆம் திகதி பி.ப. 9.00 மணிக்கு நிறைவடையும்.

தற்போது அரச/ மாகாண அரச சேவையிலுள்ள அலுவலர்கள் விண்ணப்பப்படிவத்தின் பிரதியொன்றை தமது தனிப்பட்ட கோப்பில் சேர்ப்பதற்காக நிறுவனத் தலைவரிடம் ஒப்படைத்தல் வேண்டும். அத்துடன் நேர்முகத் தேர்விற்காக

SINCE 2014 Gazette.lk AMBITIONS REALIZED

அழைக்கப்படும் சந்தர்ப்பத்தில் நிறுவனத் தலைவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவத்தின் பிரதியையும் சேவை உறுதிப்படுத்தல் கடிதத்தையும் சமர்ப்பித்தல் வேண்டும்.

விண்ணப்பங்களை சமர்ப்பித்தலை இறுதித் திகதி வரை தாமதப்படுத்துவதால் ஏற்படும் யாதேனும் பாதகமான சூழ்நிலையை விண்ணப்பதாரி தாமே பொறுப்பேற்றல் வேண்டும்.

01. பதவிக்குரிய கடமைகள்:

கடலில் உள்ள மீனவர்களுக்கும் மீன்பிடிப் படகுகளுக்கும் ஏற்படும் அனர்த்தங்கள் தொடர்பில் செயற்படுதல், தினசரி மீனவர்களுக்குரிய காலநிலை அறிக்கைகளை வழங்குதல், கடற்றொழில் பிரிவு அலுவலகங்களின் செய்திப் பரிமாற்றங்களுடன் தொடர்புபடுதல், மீன்பிடிப் படகுகளுடன் செய்திப் பரிமாற்றம் செய்தல், அவைகளின் படகு உரிமையாளர்களுக்கு மற்றும் அவசியமானவர்களுக்குத் தகவல்களை வழங்குதல், நவீன தொழில்நுட்பம் மூலம் மீனவர்களுக்கு முறையான தகவல்களை வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ள முறையைப் பேணிச் செல்லுதல் மற்றும் 24 மணித்தியாலமும் மீனவர்களுக்குத் தகவல்களை வழங்குதல் ஆகிய கடமைகளைக் கொண்ட பதவியாகும். (இரவு நேரக் கடமைகள் கட்டாயமானவையாகும்.)

02. சேவை நிபந்தனைகள்:

(அ) அரசாங்க சேவையில் நியமனங்களை ஒழுங்குபடுத்துகின்ற பொது நிபந்தனைகளுக்கும், அரச சேவைகள் ஆணைக்குழுவினால் 2012.08.14 திகதியிட்ட PSC/EST/7/1/36/1/2012 ஆம் இலக்கத்தின்படி அங்கீகரிக்கப்பட்ட முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்பப் பிரிவு 3 சேவைப் பிரிவின் கனிஷ்ட வானொலி அலுவலர் பதவிக்கான ஆட்சேர்ப்பு முறைமைக்கும், அத்துடன் அமுலாக்க முறைமைக்குத் தற்போது செய்யப்பட்டுள்ள அல்லது எதிர்காலத்தில் செய்யப்படவுள்ள திருத்தங்களுக்கும், தாபன விதிக்கோவை மற்றும் நிதிப் பிரமாண விதிகளுக்கும் உட்பட்டு தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரியொருவர் பயிற்சிக் காலப்பகுதியை வெற்றிகரமாக நிறைவு செய்த பின்னர் கனிஷ்ட வானொலி அலுவலர் III ஆம் தரத்திற்கு நியமிக்கப்படுவார்.

(ஆ) இப்பதவி நிரந்தரமானது. ஓய்வூதியத்திற்குரியது. இப்பதவி ஓய்வூதியத்திற்குரியது எனக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், எதிர்காலத்தில் ஆட்சேர்ப்புச் செய்யப்படும் அலுவலர்களின் ஓய்வூதிய முறைமை தொடர்பில் அரசாங்கத்தினால் எதிர்காலத்தில் எடுக்கப்படும் கொள்கை ரீதியான தீர்மானங்களுக்கு உட்பட்டிருத்தல் வேண்டும். மேலும், நீங்கள் விதவைகள் மற்றும் அநாதைகள் ஓய்வூதிய முறைமைக்கு/தபுதாரர்கள் மற்றும் அநாதைகள் ஓய்வூதிய முறைமைக்குச் பங்களிப்புச் செய்தல் வேண்டும். அரசாங்கத்தினால் அவ்வப்போது குறிக்கப்படும் முறைமைக்கு இணங்க நீங்கள் அதற்கான பங்களிப்புப் பணத்தைச் செலுத்துதல் வேண்டும்.

(இ) இந்தப் பயிற்சித் தரத்திற்கு உள்ளீர்க்கப்படும் விண்ணப்பதாரிகள் கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களத்தின் மேற்பார்வையின் கீழ் சமுத்திரப் பல்கலைக்கழகத்தினால் நடாத்தப்படும் ஆறு (06) மாத காலப் பயிற்சியை வெற்றிகரமாக நிறைவுசெய்து சான்றிதழைப் பெற்றதன் பின்னர் கனிஷ்ட வானொலி அலுவலர் III ஆம் தரத்திற்குத் தெரிவு செய்யப்பட்டு நியமிக்கப்படுவர்.

(ஈ) இப்பதவியானது மூன்று வருட தகுதிகாண் காலத்திற்கு உட்பட்டது. கனிஷ்ட வானொலி அலுவலர் III ஆம் தரத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டு மூன்று (03) வருடங்களுக்குள் ஆட்சேர்ப்பு முறைமையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு முதலாவது வினைத்திறன் காண் தடைப் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

(உ) பயிற்சிக் காலப்பகுதிக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டு III ஆம் தரத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படும் அலுவலர்கள் III ஆம் தரத்திற்கு நியமனங்கள் பெற்ற நாளிலிருந்து 10 வருட காலத்திற்குத் கண்டிப்பாக கடற்றொழில் மற்றும் நிரியல் வளங்கள் திணைக்களத்தில் சேவை செய்தல் வேண்டும்.

(ஊ) அவ்வாறு 10 வருட சேவைக்கு முன்னதாக விலகிச் செல்ல மாட்டேன் எனவும், அதற்கு முன்னதாக சேவையிலிருந்து விலகிச் செல்வதாயின் கடற்றொழில் மற்றும் நிரியல் வளங்கள் பணிப்பாளர் நாயகத்தால் சிபாரிசு செய்யப்படும் தொகையைத் திணைக்களத்திற்குச் செலுத்துவதற்கு இணங்குகிறேன் எனவும் பொறுப்புணர்வுக்குப் பிணைக்கப்படுதல் வேண்டும்.

(எ) பயிற்சியின் இறுதியில் எழுத்து மூல மற்றும் செய்முறைப் பரீட்சைக்கு உட்படுத்தப்பட்டு, அதில் சித்தியடையும் பயிற்சித் தரத்திற்குரிய அலுவலர்கள் III ஆம் தரத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படுவர். முதலாம் தடவை பயிற்சி நிறைவுப் பரீட்சையில் சித்தியடையாதவர்கள் மீண்டும் நடாத்தப்படும் பயிற்சி நிறைவுப் பரீட்சையில் தோற்றுவதற்கு 02 சந்தர்ப்பங்கள் வழங்கப்படுவதுடன், அதிலும் சித்தியடையாதவர்களின் பயிற்சி நியமனம் முடிவுறுத்தப்படும்.

Gazette.lk SINCE 2014 AMBITIONS REALIZED

03. சம்பள வகை மற்றும் அளவுத்திட்டம் :

முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்பப் பிரிவு 3 அலுவலர் பிரிவிற்கான ஆட்சேர்ப்பு முறைமைக்கேற்ப கனிஷ்ட வானொலி அலுவலர் பயிற்சித் தரத்தின் பயிற்சிக் காலத்திற்குரிய மாதாந்தக் கொடுப்பனவு ரூ. 12,000/- ஆகும்.

சமுத்திரப் பல்கலைக்கழகத்தினால் நடாத்தப்படும் ஆறு (06) மாதப் பயிற்சியை வெற்றிகரமாக நிறைவு செய்து சான்றிதழைப் பெற்றுக் கொள்ளும் பயிலுனர்கள் கனிஷ்ட வானொலி அலுவலர் III ஆம் தரப் பதவிக்கு நியமிக்கப்படுவர். அதற்கரிய சம்பள அளவுகையானது பொது நிர்வாகச் சுற்றறிக்கை இல. 10/2025 அட்டவணை II (MT 1-2025) இற்கமைய ரூ. 50,090 - 10 X 540-11 X 630-10 X 1,010-10 X 1,190-84,420/- (ஆரம்ப சம்பளப் படிநிலை 50,090/-) ஆகும். இதற்கு மேலதிகமாக அரச அலுவலர்களுக்கு அரசாங்கத்தினால் அவ்வப்போது வழங்கப்படும் ஏனைய கொடுப்பனவுகளும் உரித்தாகும்.

04. கல்வித் தகைமைகள்:

I. சிங்களம் / தமிழ் / ஆங்கில மொழி, கணிதம் மற்றும் மேலும் இரண்டு பாடங்களுக்குச் சிறப்புத் தேர்ச்சிகளுடன் ஒரே தடவையில் ஆறு (06) பாடங்களில் கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தரம்) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்

மற்றும்

II. கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தர) பரீட்சையில் விஞ்ஞான / கணித / தொழில்நுட்பவியல் பாடநெறிக்குரிய மூன்று (03) பாடங்களில் (பொதுச் சாதாரண பரீட்சை தவிர்ந்த) ஒரே தடவையில் சித்தியடைந்திருத்தல். பழைய பாடத்திட்டத்தின்படி மூன்று (03) பாடங்களில் ஒரே தடவையில் சித்தியடைந்திருத்தல் போதுமானதாகும்.

05. தொழில்சார் தகைமைகள்: ஏற்புடையதன்று

06. அனுபவம்: ஏற்புடையதன்று.

07. உடல் தகைமைகள்:

ஒவ்வொரு விண்ணப்பதாரியும் இலங்கையின் எந்தவொரு பிரதேசத்திலும் (இலங்கை நிலப்பரப்பிற்குரிய தீவுகள் உட்பட) சேவையாற்றுவதற்கும் பதவியின் கடமைகளைப் பூர்த்தி செய்வதற்கும் போதுமான உடல் மற்றும் உளத் தகுதியைக் கொண்டிருத்தல் வேண்டும்.

08. ஏனைய தகைமைகள்:

I. ஒவ்வொரு விண்ணப்பதாரியும் இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.

II. விண்ணப்பதாரிகள் சிறந்த நற்பெயரைக் கொண்டிருத்தல் வேண்டும்.

III. எந்தவொரு மதப் பிரிவின் துறவற நிலையை வகிக்கும் எந்தவொரு நபரும் இப் பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தகுதி பெற மாட்டார்கள்.

IV. பதவிற்கான ஆட்சேர்ப்புச் செய்வதற்கான போட்டிப் பரீட்சையில் தோற்றுவதற்குத் தேவையான அனைத்துத் தகைமைகளும் விண்ணப்பங்களைக் கோரும் அறிவித்தலில் / வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்படும் இறுதித் திகதிக்கு முன்னர் அனைத்து விதத்திலும் பூர்த்தி செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

09. வயது எல்லை :

விண்ணப்ப முடிவுத்திகதிக்கு 18 வயதிற்கு குறையாது மற்றும் 35 வயதிற்கு மேற்படாதிருத்தல் வேண்டும்.(அதற்கமைய வயது தொடர்பான தகைமையானது பிறந்த திகதியானது 2008.12.11 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னதாகவும் மற்றும் 1991.12.11 ஆம் திகதி அல்லது அதற்குப் பின்னதாகவும் அமைந்திருந்தால் மட்டுமே பூர்த்தியாகும்.)

Gazette.lk SINCE 2014 AMBITIONS REALIZED

10.ஆட்சேர்ப்பு முறைமை :

எழுத்து மூலப் போட்டிப் பரீட்சை மற்றும் பொது நேர்முகப் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் கனிஷ்ட வானொலி அலுவலர் பயிற்சித் தரத்திற்காக ஆட்சேர்ப்புச் செய்யப்படுவர். எழுத்து மூலப் பரீட்சையில் சித்தியடைந்த விண்ணப்பதாரர்களின் மொத்தப் புள்ளிமட்டங்களின் தகைமை வரிசைக்கிரகத்திற்கு ஏற்ப வெற்றிடங்களின் எண்ணிக்கைக்குச் சமனான தொகையினர் பொது நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தப்பட்டுத் தகுதியானவர்கள் தெரிவு செய்யப்படுவர். பயிற்சியை வெற்றிகரமாக நிறைவு செய்வதற்குத் தவறும் பயிலுனர்கள் இருப்பின் தமது பயிற்சிக் காலத்தை நீடித்துக்கொள்வதற்கு எவ்வித சந்தர்ப்பமும் வழங்கப்பட மாட்டாது என்பதுடன், அத்தகைய பயிலுனர்களின் பயிற்சி முடிவுறுத்தப்படும்.

11. எழுத்து மூலப் பரீட்சை:

SINCE 2014 Gazette.lk AMBITIONS REALIZED

பரீட்சையானது சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் மட்டுமே நடாத்தப்படுவதுடன், கோரப்படும் மொழியினைப் பின்னர் மாற்றுவதற்கு அனுமதிக்கப்பட மாட்டாது. பின்வரும் பாடங்களைக் கொண்ட இரண்டு (02) வினாத்தாள்களைக் கொண்ட எழுத்து மூலப் பரீட்சை நடாத்தப்படும். ஒவ்வொரு பாடத்திலும் சித்தியடைவதற்குப் பெற்றுக்கொள்ள வேண்டிய குறைந்தபட்சப் புள்ளிமட்டங்கள் பின்வருமாறு அமையும்:

பாடங்கள்	காலம்	உயர் புள்ளிகள்	தேர்ச்சிப் புள்ளிகள்
1. நுண்ணறிவுப் பரீட்சை	01 மணித்தியாலம்	100	40
2. பொது அறிவு	01 மணித்தியாலம்	100	40

அபேட்சகர்கள் அனைத்து வினாத்தாள்களுக்கும் தோற்றுதல் அவசியமானதுடன், அனைத்து வினாத்தாள்களுக்கும் ஒரே மொழியில் மட்டுமே பதிலளித்தல் வேண்டும்.

12. பரீட்சைக்கான பாடத்திட்டம்:

வினாப்பத்திரம்	பாடத்திட்டம்
நுண்ணறிவு	புள்ளிவிபரத் திறன், சிக்கல் தீர்த்தல், தர்க்கத் திறன் மற்றும் பொது நுண்ணறிவு ஆகிய தலைப்புக்களின் கீழ் தயாரிக்கப்பட்ட பாடப்பரப்பிற்குரிய பல்தேர்வு வினாத்தாளாகும். அனைத்து வினாக்களுக்கும் பதிலளித்தல் வேண்டும். (காலம்: 01 மணித்தியாலம்.)
பொது அறிவு	இலங்கை, உலகளாவிய நிதியியல்,பொருளியல்,வணிக,அரசியல்,சர்வதேச தொடர்புகள், முகாமைத்தும், விஞ்ஞானமும் தொழிநுட்பமும், கல்வி, சுகாதாரம், விளையாட்டு, சுற்றாடல், சமூக கலாச்சாரம் போன்ற துறைகளின் முக்கிய நிகழ்வுகள் தொடர்பாகவும் குறிப்பாக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு கடற்றொழில் துறை தொடர்பான அடிப்படை அறிவை மதிப்பிடுவதற்காகத் தயாரிக்கப்படுகின்ற பல்தேர்வு வினாக்களிற்கு விடையளித்தல் வேண்டும்.(காலம்: 01 மணித்தியாலம்.)

SINCE 2014 Gazette.lk AMBITIONS REALIZED

13. பொது நேர்முகத் தேர்வு **:** ஏற்புடையது

14. பரீட்சைக் கட்டணம் **:**

பரீட்சைக் கட்டணம் ரூ.600/- ஆகும்.கட்டணம் செலுத்தும் போது இணையவழி முறைமையினால் வழங்கப்படுகின்ற பின்வரும் கட்டணக் கொடுப்பனவு முறைகளின் மூலம் மாத்திரமே கொடுப்பனவு செய்தல் வேண்டும்.

i. ஏதேனும் வங்கிக் கடனட்டை மூலம் (Any Bank Credit Card)
ii. இணைய வழிக் கொடுப்பனவு வசதியுள்ள ஏதேனும் வங்கிப் பற்று அட்டை மூலம் (Any BankDebit Card with the Facility of Internet Transactions)
iii. இலங்கை வங்கியின் இணையவழி வங்கி முறை (Online Banking Method of Bank of Ceylon)
iv. ஏதேனும் இலங்கை வங்கிக் கிளை ஒன்றின் மூலம் (Any Branch of the Bank of Ceylon)

குறிப்பு :-

(அ) மேற்குறிப்பிட்ட முறைகளின் மூலம் கட்டணம் செலுத்தும் விதம் பற்றிய அறிவுறுத்தல்கள் இணையத்தில் பரீட்சை தொடர்பான தொழில்நுட்ப அறிவுறுத்தல்களின் கீழ் வெளியிடப்பட்டுள்ளன.

(ஆ) கொடுப்பனவு கிடைக்கப் பெற்றமை குறுஞ்செய்தி (SMS) மூலமாக அல்லது மின்னஞ்சல் மூலமாக அறிவிக்கப்படும். பரீட்சைக் கட்டணத்திற்கான முழுமையான தொகையே செலுத்தப்பட வேண்டுமென்பதுடன் பரீட்சைக் கட்டணத்தை குறைவாக அல்லது அதிகமாக செலுத்தியுள்ள விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். மேற்குறிப்பிட்ட கொடுப்பனவு முறைகள் மூலம் பரீட்சைக் கட்டணம் செலுத்தும் போது ஏற்படுகின்ற சிக்கல்கள் தொடர்பில் இலங்கை பரீட்சைகள் திணைக்களம் பொறுப்பேற்க மாட்டாது.

(இ) பரீட்சைக்காகச் செலுத்தப்பட்ட பணம் எந்தவொரு காரணத்திற்காகவும் மீளச் செலுத்தப்பட மாட்டாது அல்லது வேறொரு பரீட்சைக்கு மாற்றப்படவும் மாட்டாது.

15. விண்ணப்பிக்கும் முறை **:**

நிகழ்நிலை (Online) பரீட்சை விண்ணப்பப்படிவத்தை ஆங்கில மொழியில் மாத்திரமே பூர்த்தி செய்தல் வேண்டும். விண்ணப்பதாரியினால் நிகழ்நிலையூடாக சமர்ப்பிக்கப்படுகின்ற விண்ணப்பப்படிவம் திணைக்களத்தினால் ஏற்றுக் கொள்ளப்பட்டது/ஏற்றுக்கொள்ளப்படவில்லை என்பது தொகுதியினுள் உள்நுழைவதற்கு பயன்படுத்தப்படுகின்ற தொலைபேசி எண்ணிற்கு குறுஞ்செய்தி(SMS) ஒன்றின் மூலமோ மின்னஞ்சல் (E-mail) செய்தியாகவோ அறியத்தரப்படும். நிகழ்நிலை விண்ணப்பப்படிவத்தை பூர்த்தி செய்வதற்கு முன்னர் பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்காக தயாரிக்கப்பட்டுள்ள அறிவுறுத்தற் படிவத்தை(Instructions) தரவிறக்கம் செய்து கொள்க. விண்ணப்பப்படிவத்தை பூர்த்தி செய்யும் போது அவ்வறிவுறுத்தல்களை ஒழுங்காக பின்பற்றுக. விண்ணப்பப்படிவத்தின் பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பப்படிவங்கள் அறிவித்தல் எதுவுமின்றி நிராகரிக்கப்படும்.

16. பரீட்சைக்குத் தோற்றுவதற்கான தகைமை பெறுதல்:

(அ) வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்டவர்கள் மட்டுமே விண்ணப்பித்துள்ளார்கள் என்ற முன்னூகத்தின் அடிப்படையில் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் சரியாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களைச் சமர்ப்பித்த விண்ணப்பதாரர்களுக்குப் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சைத் அனுமதிப்பத்திரங்கள் இணையவழியாக மட்டுமே வெளியிடப்படும். பரீட்சை அனுமதிப்பத்திரங்கள் வெளியிடப்பட்டவுடன் இலங்கை பரீட்சைத் திணைக்களத்தினால் அதுகுறித்த விடயம் இணைய அறிவித்தல் மூலமாக / விண்ணப்பதாரர்களுக்குக் குறுஞ்செய்தி மூலமாக அறிவிக்கப்படும். தமது அனுமதிப்பத்திரம் கிடைக்கப்பெறாத எதேனுமொரு அபேட்சகர் இருப்பின், இணைய அறிவித்தலில். குறிப்பிட்டபடி அது தொடர்பில் இலங்கை பரீட்சைத் திணைக்களத்தின் நிறுவனப் பரீட்சைகள் அமைப்புப் பிரிவில் விசாரித்தல் வேண்டும். அவ்வாறு விசாரிக்கும் போது விண்ணப்பதாரி தான் கோரியுள்ள பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரியின் முழுப்பெயர், தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் முகவரி என்பவற்றைச் சரியாகக் குறிப்பிட்டுக் கோரிக்கை விடுக்கும் கடிதத்தை இணைய அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி விசாரிப்பது மிகவும் பயனுள்ளதாக அமையும். அவ்வாறு விசாரிக்கும் போது பரீட்சைத் திணைக்களத்தினால் விசாரிக்கப்படும் எதேனுமொரு தகவலை உறுதிப்படுத்துவதற்காகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்தின் நிழற்பிரதியையும் பரீட்சைக் கட்டணம் செலுத்தியமைக்கான பற்றுச்சீட்டின் நிழற்பிரதியையும் அருகில் வைத்திருப்பது பயனுள்ளதாகும். அனுமதிப்பத்திரத்தைப் பரிசீலனை செய்து திருத்தங்கள் இருப்பின் உரிய நேரத்தில் பரீட்சைத் திணைக்களத்தைத் தொடர்புகொண்டு விண்ணப்பத்திற்கமைய

SINCE 2014 Gazette.lk AMBITIONS REALIZED

உரிய திருத்தங்களைச் செய்து கொள்ளுதல் வேண்டும். பரீட்சை மண்டபத்தில் / நேர்முகப் பரீட்சையின் போது திருத்தங்கள் கோரி விடுக்கப்படும் கோரிக்கைகள் பரிசீலிக்கப்பட மாட்டாது.

(ஆ) அபேட்சகர் தனக்குரிய பரீட்சை மண்டபத்திலேயே பரீட்சை எழுத வேண்டுமென்பதுடன், ஒவ்வொரு அபேட்சகரும் உரிய பரீட்சை மண்டபத்தில் பரீட்சை எழுதுகின்ற முதல் நாளில் மண்டப அதிபரிடம் கையொப்பத்தை உறுதிப்படுத்திய அனுமதிப்பத்திரத்தை ஒப்படைத்தல் வேண்டும். ஒவ்வொரு அபேட்சகரும் பரீட்சை தொடர்பாக பின்பற்ற வேண்டிய விதிகளின் தொகுப்பொன்று இவ்வறிவித்தலில் வெளியிடப்பட்டுள்ளது.

(இ) அபேட்சகர் ஒருவருக்கு அனுமதிப்பத்திரம் வழங்குவது அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான தகுதிகளை பூர்த்தி செய்துள்ளதற்கான அங்கீகாரமாக கருதப்படல் கூடாது.

(ஈ) பரீட்சையை நடாத்துவது தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்பட்ட விதிகள் மீறப்படின் பரீட்சைகள் ஆணையாளரினால் விதிக்கப்படுகின்ற தண்டனையொன்றிற்கு உள்ளாதல் வேண்டியேற்படலாம்.

17.விண்ணப்பதாரியின் அடையாளம் **:**

பரீட்சை அபேட்சகர்கள் பரீட்சை மண்டபத்தினுள் தாம் தோற்றுகின்ற ஒவ்வொரு பாடத்திற்காகவும் மண்டப அதிபர் திருப்தியடையக்கூடிய சுய அடையாளத்தை உறுதி செய்தல் வேண்டும்.அதற்காக கீழ் காட்டப்படும் எந்தவொரு ஆவணமும் ஏற்றுக்கொள்ளப்படும்.

I. தேசிய அடையாள அட்டை
II. செல்லுபடியான கடவுச்சீட்டு
III. செல்லுபடியான இலங்கை சாரதி அனுமதிப்பத்திரம்

அதேபோன்று பரீட்சை அபேட்சகர்கள் தமது அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்ளும் வகையில் முகத்தை மறைக்காமலும், இலத்திரனியல் தொடர்பாடல் உபகரணங்களை அணியவில்லை என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளும் வகையில் இரண்டு காதுகளையும் மறைக்காமலும் பரீட்சை மண்டபத்தினுள் பிரவேசித்தல் வேண்டும். அதற்கு இணங்காத விண்ணப்பதாரிகள் பரீட்சை மண்டபத்தினுள் அனுமதிக்கப்பட மாட்டார்கள். மேலும் பரீட்சை மண்டபத்தினுள் பிரவேசித்த கணத்திலிருந்து பரீட்சை முடிவுற்று அங்கிருந்து வெளியேறும் வரை முகத்தையும் காதுகளையும் மறைக்காமல் இருத்தல் வேண்டும்.

18. நியமனத்திற்காக தெரிவு செய்தல் **:**

எழுத்து மூலப் பரீட்சையில் உயர் புள்ளிகளைப் பெறும் விண்ணப்பதாரிகளுக்கிடையில் ஆட்சேர்ப்புச் செய்வதற்கு எதிர்பார்க்கப்படும் வெற்றிடங்களின் எண்ணிக்கைக்குச் சமனான தொகையினர் பயிற்சித் தரத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படுவர். பயிற்சியை வெற்றிகரமாக நிறைவு செய்து சான்றிதழ்களைப் பெற்றுள்ள விண்ணப்பதாரிகள் கனிஷ்ட வானொலி அலுவலர் III ஆம் தரத்திற்காகத் தெரிவு செய்யப்பட்டு நியமிக்கப்படுவர். கோரப்பட்ட சந்தர்ப்பத்தில் ஆவணங்களைச் சமர்ப்பிக்கத் தவறும் விண்ணப்பதாரிகளின் விண்ணப்பம் பரிசீலிக்கப்பட மாட்டாது.

19. பெறுபேறுகளை வெளியிடுதல் **:**

தொடர்புடைய பெறுபேற்று ஆவணம் ‘‘பணிப்பாளர் நாயகம்,கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களம்’’ இடம் ஒப்படைக்கப்படுவதுடன் பரீட்சைக்குத் தோற்றிய சகல பரீட்சார்த்திகளுக்கும் தனிப்பட்ட முறையில் பெறுபேறுகள் அறிவிக்கப்படும் அல்லது www.results.exams.gov.lk இணையத்தளத்தில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் வெளியிடப்படும். ‘‘பரீட்சைப் பெறுபேறுகள் தொடர்பாகப் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் தீர்மானமே இறுதியான தீர்மானமாகும்.□

20. போலியான தகவல்களை வழங்குதல் **:**

விண்ணப்பதாரியொருவர் தகைமையற்றவரென வெளிப்படுத்தப்படுமிடத்து பரீட்சைக்கு முன்னர் அல்லது பரீட்சையின் போது அல்லது பரீட்சையின் பின்னர் அல்லது எச்சந்தர்ப்பத்திலேனும் அவருடைய விண்ணப்பத்தை ரத்துச் செய்வதற்கு வாய்ப்புள்ளது. விண்ணப்பதாரியொருவர் சமர்ப்பித்துள்ள யாதேனுமொரு விடயம் அது பொய்யானதென்பதை அறிந்தே சமர்ப்பித்திருப்பதாக வெளிப்படுத்தப்படின் அல்லது ஏதேனும் முக்கியமான விடயமொன்றை வேண்டுமென்றே மறைத்திருப்பின் அவர் அரச சேவையிலிருந்து பணிநீக்கம் செய்யப்படுவதற்கு உட்படுவார்.

Gazette.lk SINCE 2014 AMBITIONS REALIZED

21. இந்த விதிகளில் கருத்திற்கொள்ளப்படாத விடயங்கள் தொடர்பாக அரச சேவைகள் ஆணைக்குழு தீர்மானிக்கும் முறைமைக்கேற்ப நடவடிக்கை எடுக்கப்படும்.

22. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் வெளியிடப்படும் இவ்வறிவித்தலில் ஒவ்வொரு மொழி வெளியீட்டிலும் ஏதேனும் ஒவ்வாமை/பொருத்தமின்மைகள் ஏற்படின் சிங்கள மொழி மூல அறிவித்தல் வலுவானதாகும்.

பணிப்பாளர் நாயகம்,
கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களம்,
மாளிகாவத்தை,
கொழும்பு 10.

SINCE 2014 Gazette.lk AMBITIONS REALIZED

2026.11.

11 - 152

Gazette.lk AMBITIONS REALIZED